

திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக முதன்மைச் செயலாளரும், சட்டமன்றத் துணைத் தலைவருமான கே.என்.நேரு தனது தொகுதிக்கு உட்பட்ட 51, 52, 53, 54, 55 மற்றும் 56 ஆகிய வார்டுக்கு உட்பட்ட செடல் மாரியம்மன் கோவில், கூனி பஜார், மார்சிங் பேட்டை, அந்தோணியார் கோவில் தெரு, கான்வென்ட் ரோடு, மேலப்புதூர், தலைமை தபால் நிலையம், முத்தரையர்சிலை, ராஜாகாலனி,பெரிய மிளகு பாறை, கருமண்டபம், ராம்ஜிநகர் உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்அருகில் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், வழக்கறிஞர்கள் ஓம் பிரகாஷ் பாஸ்கர் கவியரசன் அந்தோணி மணிவண்ண பாரதி முத்துச்செல்வம், குடமுருட்டி சேகர் டோல்கேட் சுப்ரமணியன், கமல் முஸ்தபா மோகன்தாஸ், மார்சிங் பேட்டை செல்வம் ,கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி, கவிதா, தனசேகர், கருப்பையா உள்ளிட்ட பலர் உடன்சென்றனர்.

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலினை

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நியமித்த - கழகத் தலைவருக்கு நன்றி!

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுவில் தீர்மானம்!

திருச்சி, மே. 16-

திருச்சி தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன

சிறப்பு தீர்மானமாக : கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருச்சி கிழக்கு தொகுதி யில் இடைத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என செயற்குழுவில் ஏக மனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது .

**முக்கிய தீர்மானங்கள் :**

**தலைவருக்கு நன்றி:**

உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நியமித்ததற்காகக் கழகத் தலைவருக்கு இந்தச் செயற் குழு நன்றி தெரிவிக்கிறது.

**மகளிர் உரிமைத் தொகை:**

பெண்களுக்கான உரி மைத் தொகையை மே 15 ஆம் தேதி வங்கிக் கணக் கில் வரவு வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, தமிழக முதல்வர் உடனடியாக அதனை விடு விக்க வேண்டும் என வலி யுறுத்தப்படுகிறது.

**வாக்காளர்களுக்கு நன்றி:**

திருச்சி தெற்கு மாவட் டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று தொகுதிகளில் கழக மற் றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்க ளித்த மக்களுக்கு செயற் குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாராட்டு:**

சட்டமன்றத்தில் தமிழக அரசின் திட்டங்கள் குறித் தும், அளித்த வாக்குறுதி கள் (மகளிர் உரிமைத் தொகை 2500 ஆக உயர்வு, இலவசப் பேருந்து பய ணம், 6 சிலிண்டர்கள் போன்றவை) குறித்தும் கேள்வி எழுப்பி, மக்கள் நம்பிக்கையைப் பெறும் வகையில் செயல்பட்ட எதிர்க்கட்சித் தலைவருக் குப் பாராட்டு மற்றும் வாழ்த்துகள் தெரிவிக்கப்ப டுகிறது.




இக்கூட்டத்தில் மாநக ரக் கழகச் செயலாளர் மு மதிவாணன், மாநிலங்கள் ளவை உறுப்பினர் கவிஞர் சல்மா, தலைமைச் செயற் குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாவட்ட அவைத்தலைவர் கோவிந் தராஜ், மாநில அணி நிர் வாகி செந்தில் மற்றும் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர் அணி களின் அமைப்பாளர் கள், உள்ளாட்சி அமைப் புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

# கொள்கையிலே எதிர்நீச்சல்! கோட்டையிலே புலிப்பாய்ச்சல்!



முன்னேற்றக் கழகத்தின் வீரனடி!.. எங்கள்
முத்தமிழ் அறிஞரின் பேரனடி!
பன்னாள் இலட்சியப் பயிற்சியடி!.. இதோ!
பாய்ந்தது புலிக்குட்டி!பதினாறடி!

வெல்லும் திறல்கொண்ட சொல்லழுத்தம்!.. முத்து
வேல்கரு ணாநிதிக் கொள்கைரத்தம்!
நெல்லுக்கும் புல்லுக்கும் நேரில்யுத்தம்!.. "உதய
நிதி"க்குநம் தமிழன்னை அன்புமுத்தம்!

நின்று முழங்கிய வீறுணர்ச்சி!..நெஞ்சில்
நேர்மைத் திறம்கொண்ட பேரெழுச்சி!
மன்றில் உரையல்ல! வாள்சுழற்சி!.. அங்கு
மவுனிகள் வேடத்தில் ஆளும்கட்சி!

முஸ்லீம், கிறிஸ்தவர், இந்துக்குடி.. மக்கள்
மூளைக்குள் ஞம்,திரை மோகமடி!
"புஷ்பா" திரைப்படச் சாட்டைஅடி!.. அறப்
போரில் இனிஇவன் வேட்டையடி!

பீடு மிகும்இளந் தமிழனடி!.. சட்டப்
பேரவை எதிர்க்கட்சித் தலைவனடி!
சூடும் தமிழ்நிலம் நாளையடி!.. இவன்
தோள்களி லே,புகழ் மாலையடி!



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் அறிவிப்பு!



கிருஷ்ணகிரி. மே.16-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற் குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவ ராஜ் அவர்கள் தலைமை யில் இன்று (16.05.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் ஒசூர் மாவட்ட கழக அலுவலகத் தில் இந்த செயற்குழு கூட் டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டமானது சட்ட மன்ற உறுப்பினர், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள் முன் னிலையில் நடைபெற உள் ளது.

இதில் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செய லாளர்கள், நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அணிகளின் அமைப்பாளர் கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:1. நடை பெற்று முடிந்த 2026 சட்ட மன்ற தேர்தல் குறித்து,

1.ஜுன்3 முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்த நாள் குறித்து,

2. கழக ஆக்கப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட்ட உள்ளது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித் ள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புழல் எம். ஜெயபால்
### மே 16 (2013)



திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம், செங்குன்றம் பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்ட தோழர்களில் இவரும் ஒருவர்.

கல்லூரியில் படிக்கும் காலந்தொட்டு தி.மு.க. மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியவர்.

புழல் ஒன்றிய பெருந்தலைவராகவும், மாநில பெருந்தலைவர்கள் மன்ற செயலாளராகவும், சைதை தாலுக்கா வேளாண் விளைபொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத் தலைவராகவும் சிறப்புற பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளராகவும், மாவட்ட இலக்கிய அணி புரவலராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ராஜஸ்தான் மாநிலத்தில் நீட் தேர்வு மோசடியில் ஈடுபட்ட பா.ஜ.க. நிர்வாகி!

ஜெய்பூர், மே 15-

நாடு முழுவதும் கடந்த 3ம் தேதி நடைபெற்ற நீட் தேர் வின் போது வினாத்தாள் தேர்வு தொடங்குவதற்கு முன்பே கசிந்தது. இதனை தொடர்ந்து நீட் நுழைவுத்தேர்வை ரத்து செய் வதாக தேசிய தேர்வு முகமை அறிவித்தது. தற்போது இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்நிலையில், ராஜஸ் தான் மாநிலம் ஜெய்ப்பூரைச் சேர்ந்த தினேஷ் பிவால் என்ற பா.ஜ.க. இளைஞர் அணி நிர் வாகியை சிபிஐ கைது செய் துள்ளது. அவரிடன் நடத்தப் பட்ட விசாரணையில், 30 லட்சம் ரூபாய் கொடுத்து நீட் கேள்வித்தாளை இவர் பெற்று தனது மகனுக்கு வழங்கியது டன், பலருக்கு விற்பனை செய்ததும் தெரியவந்தது. இத னைத் தொடர்ந்து தினேஷ் பிவாலின் சகோதரர், அவரது மகன் என 5 பேர் கைது செய் யப்பட்டனர்.

இந்நிலையில், நடப் பாண்டு நீட் தேர்வுக்கு முன் பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் நீட் வினாக்களின் கையெழுத்து பிரதியை ஸ்கேன் செய்து தனது மகன் விகாஸுக்கு அனுப்பியதும், அதனை அவர் சிகார் நகரில் உள்ள நீட் பயிற்சி மையத் துக்கு அனுப்பியதும் தெரிய வந்துள்ளது. இந்த கேள்விகள் 5 லட்சம் ரூபாய் வரை விற்கப் படுள்ளதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அந்த நீட் மையத்தில் பயின்ற மாணவர்கள் ஆசிரியர்களை யும் சி.பி.ஐ விசாரணை வளையத்தில் கொண்டுவந் துள்ளது. முன்னதாக நீட் தேர்வு முடிந்த உடனேயே, தேர்வு முடிவுகள் வெளியாவ தற்கு முன்னரே இந்த பயிற்சி மையம் மாணவர்களை அழைத்து வெற்றி கொண் டாட்டத்தில் ஈடுபட்டது. நீட் மோசடியில் கைதான பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் கடந்த ஆண்டும் நீட் மோசடி யில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. தினேஷ் பிவாலின் மகன், சிகார் நீட் பயிற்சி மையத்தில் "Topper" ஆக வந்துள்ளார். இவ ரது குடும்பத்தை சேர்ந்த 4 பேர் கடந்த ஆண்டு நீட் தேர் வில் வெற்றி பெற்றுள்ளதும் தற்போது தெரியவந்துள்ளது.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!


## மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை!

தஞ்சாவூர், மே.16.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற் குழு கூட்டம் கும்பகோணம் மாவட் டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக் கோட்டை க. அன்பழ கன் அறிக்கை வெளியிட் டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயற் குழு கூட்டம், (16-05-2026 சனிக்கிழமை) இன்று காலை 10:00 மணி யளவில் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவல கத்தில் மாவட்டக் கழக



அவைத் தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள், மாந கர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர் கள், பொதுக்குழு உறுப்பி னர்கள், மாநில நிர்வாகி கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவ றாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1. 2026 சட்டமன்ற பொது தேர்தலில் கழகம் அறிவித்த வேட்பாளர்க ளுக்கு கடின உழைப்பை தந்த கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்க ளுக்கு நன்றி தெரிவித் தல்.

2. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப் பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி நகர தி.மு.க. சார்பில், கோடை காலத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகில் பொதுமக்களுக்கு தண்ணீர் மற்றும் நீர்மோர் வழங்கும் நிகழ்ச்சிக்கு, நகர பொறுப்பாளர் அஸ்லாம் தலைமை வகித்தார். இந் நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் பங்கேற்று, நீர்மோர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு மோர், தர்பூசணி பழங்கள், குளிர் பானங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, ஒன்றிய செயலாளர் மகேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ்ராஜன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், கட்சியினர், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.